Series P/PB2/1

**SET 1**

**PRE-BOARD EXAMINATION – 2024-25**

**Q.P. Code: 106/2/1**

**Roll No.** | | | | | | | | |

**Candidate must write the Q.P. Code on the title page of the answer-book.**

- Please check that this question paper contains 10 printed pages.
- Please check that this question paper contains 15 questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்

# TAMIL

**காலஅளவு:3மணி** **மொத்தமதிப்பெண்கள்:80**

*Time allowed : 3 hours* *Maximum Marks : 80*

***General Instructions:***

*Read the following instructions very carefully and strictly follow them:*

1. *This question contains FIVE sections.*
2. *Section A: contains 2 questions [Question No. 1 to 2]*
3. *Section B: contains 4 questions [Question No. 3 to 6]*
4. *Section C: contains 4 questions [Question No. 7 to 10]*
5. *Section D: contains 2 questions [Question No. 11 to 12]*
6. *Section E: contains 3 questions [Question No. 13 to 15]*
7. *Attempt as per specific instructions for each question.*
8. *Please write down the serial no. of the question in the answer book before attempting it.*

**Section –A Unseen passage (10 Marks)பகுதி – அ (படித்தல்) 10மதிப்பெண்கள்**

**1.பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்றவிடையை எழுதுக. (5x1=5)**

தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன் என்று போற்றப்படும் சி. வை. தாமோதரனார் இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்து தம் இருபதாவது வயதிலேயே நீதி நெறி விளக்கம் என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார்.1868ஆம் ஆண்டு தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும் பின்னர்க் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ்கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதி யுள்ளார். அவருடைய தமிழ் பணியைக் கண்ட பெர்சிவல் பாதிரியார் அவரைத் தான் நடத்திய தினவர்த்தமானி என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அரசாங்கத்தாரால் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராக நியமிக்கப்பட்டார்.1884ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தாமோதரனார் எந்தப் பணியாற்றினாலும் தமது சொந்தப் பணியாகக்கருதிக்கடமையாற்றினார்.

**வினாக்கள்:**

(i) சி.வை .தாமோதரனாரின் சிறப்புப் பெயர் யாது?

A) தமிழ்ப் பதிப்புலகின் தந்தை B) தமிழ்ப்பதிப்புலகின் மகன்

C) தமிழ்ப்பதிப்புலகின் தாய் D) தமிழ்ப்பதிப்புலகின் தலைமகன்

(ii) சி.வை. தாமோதரனார் தமது இருபதாவது வயதில் வெளியிட்டநூல் எது?

A) நீதிநெறி விளக்கம் B) சூளாமணி

C) நட்சத்திரமாலை D) கட்டளைக் கலித்துறை

(iii) சி.வை.தாமோதரனார் பதிப்பித்த நூல் எது?

A) கம்பராமாயணம் B) தொல்காப்பியம்

C) வீரசோழியம் D) நன்னூல்

(iv)சி.வை.தாமோதரனார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ் எது?

A) தினத்தந்தி B) தினமலர்

C) தினகரன் D) தினவர்த்தமானி

(v) சி.வை.தாமோதரனார் எங்கு உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்?

A) கும்பகோணம் B) திருநெல்வேலி

C) யாழ்ப்பாணம் D) புதுக்கோட்டை

**2.பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கேற்ற விடைஎழுதுக. (5x1=5)**

நாட்டில் உள்ள பழமையான பெருநகரங்களில் மிக முக்கியமானது சென்னை ஆகும்.1639 முதல் சென்னை மாநகராட்சிக்கு நீண்ட வரலாறு உண்டு. இந்தியாவை ஆண்ட ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி யரால் 1688-ம் ஆண்டில் சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டது . சென்னை மாநகராட்சி 1798- ல் நிறுவப்பட்டது. அது இன்று உலக வரைபடத்தில் இடம் பெறும் அளவுக்கு சிறந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்தியாவின் கலாச்சார தலைநகராக விளங்கும் சென்னை மாநகரில் எல்லா மதத்தினரும் எல்லா மொழியினரும் வாழ்ந்து வருவதும் நவீன மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டிருப்பதும் மெட்ரோ பாலிடன் நகரம் என்ற அந்தஸ்தை இந்நகருக்குக் கிடைக்கச் செய்துள்ளது. சென்னை பல்வேறு பகுதிகளில் இருந்து வருபவர்களின் குடியேறுபவர் நகரமாக இருந்து வருகிறது .சென்னை மக்கள் தொகையில் குடியேறியவர்களின் எண்ணிக்கை 60 சதவீதமாக உள்ளது.

**வினாக்கள்:**

(i). சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் எப்போது அமைக்கப்பட்டது?

(ii). இன்று சென்னை எப்படிப்பட்ட வளர்ச்சியைப் பெற்றுள்ளது?

(iii). சென்னை நகருக்கு எந்த அந்தஸ்து கிடைத்துள்ளது?

(iv). சென்னையில் மக்கள் தொகையில் குடியேறியவர்களின் சதவீதம் எத்தனை?

(v). சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

## SECTION –B (Grammar) 12 Marks

## பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12 மதிப்பெண்கள்

**3.பிழைநீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)**

**(i)நாமே ஆற்றிக் கொல்லாத துண்பத்தை நா ஆற்றிவிடும்**

(A) நாமே ஆற்றிக் கொல்லாத துண்பத்தை நாள் ஆற்றிவிடும்

(B)நாமே ஆற்றிக் கொள்ளாத துன்பத்தை நாள் ஆற்றிவிடும்

(C) நாமே ஆற்றிக் கொல்ளாத துன்பத்தை நா ஆற்றிவிடும்

(D).நாமே ஆற்றிக் கொல்லாத துன்பத்தை நா ஆற்றிவிடும

**ii)அழுகின்ற குழந்தைக்கு வாலைப்பழம் காட்டி நிறுத்தினாள்.**

(A) அழுகின்ற குழந்தைக்கு வாழைப்பழம் காட்டி நிறுத்தினாள்.

(B)அழுகின்ற குழந்தைக்கு வாலைப்பழம் காட்டி நிறுத்தினாள்.

(C)அழுகின்ற குளந்தைக்கு வாலைப்பழம் காட்டி நிருத்தினாள்.

(D)அழுகின்ற குளந்தைக்கு வாழைப்பழம் காட்டி நிருத்தினாள்.

**(iii)கங்கையில் மூளுகினாலும் காக்கை அன்னமாகுமா?**

(A)கங்கையில் மூலுகினாலும் காக்கை அன்னமாகுமா?

(B)கங்கையில் மூளுகினாலும் காக்கை அண்ணமாகுமா?

(C)கங்கையில் முழுகினாலும் காக்கை அன்னமாகுமா?

(D)கங்கையில் முழுகினாலும் காக்கை அண்ணமாகுமா?

**(iv)வண்ணப்பரவை சிரகு விறித்துப் பரக்குது.**

(A) வன்ணப்பறவை சிரகு விறித்துப் பறக்குது.

(B)வண்ணப்பரவை சிறகு விரித்துப் பரக்குது.

(C)வன்னப்பறவை சிரகு விறித்துப் பரக்குது.

(D)வண்ணப்பறவை சிறகு விரித்துப் பறக்குது.

**(v)வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.**

(A)வயலில் களை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.

(B)வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த கழை.

(C)வயலில் கலை பறிப்பது உழவனுக்குக் கைவந்த களை.

(D)வயலில் களை பறிப்பது உழவனுக்குக் கைவந்த கலை.

**4.வல்லினமெய்யிட்டுத் திருத்தியதொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக.**

**(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** **(3x1=3)**

**(i)** தரிசு நிலங்களுக்கு பயன் மரங்களை பரிசாய் தருவோம்.

(A) தரிசு நிலங்களுக்கு பயன் மரங்களைப் பரிசாய்த் தருவோம்.

(B) தரிசு நிலங்களுக்குப் பயன் மரங்களை பரிசாய்த் தருவோம்.

(C) தரிசு நிலங்களுக்குப் பயன் மரங்களைப் பரிசாய் தருவோம்.

(D) தரிசு நிலங்களுக்கு பயன் மரங்களைப் பரிசாய் தருவோம்.

**ii) வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்.**

(A) வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்.

(B) வெந்தயம் செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்.

(C) வெந்தயச்செடிகளின் மேல் மின்னிடும் தங்கப்பூக்கள்.

(D) வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்கப் பூக்கள்.

**(iii) தன்னை காக்கசினத்தை காக்க.**

(A) தன்னைக் காக்கசினத்தை காக்க.

(B) தன்னைக் காக்கச் சினத்தைக் காக்க.

(C) தன்னை காக்க சினத்தைக் காக்க.

(D) தன்னை காக்க சினத்தைகாக்க.

**(iv) உதவி தமிழாசிரியர் தலைமை தமிழாசிரியராக பதவி உயர்வு பெற்றார்.**

(A) உதவித் தமிழாசிரியர் தலைமை தமிழாசிரியராக பதவி உயர்வு பெற்றார்.

(B) உதவி தமிழாசிரியர்த் தலைமைத் தமிழாசிரியராக பதவி உயர்வுப் பெற்றார்.

(C) உதவித் தமிழாசிரியர் தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

(D) உதவித் தமிழாசிரியர்த் தலைமை தமிழாசிரியராக பதவி உயர்வுப் பெற்றார்.

**(v) நிலவை பிடித்து சில கறைகள் துடைத்து குறுமுறுவல் பதித்த முகம்.**

(A) நிலவைப் பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்.

(B) நிலவைப் பிடித்துச் சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்.

(C) நிலவை பிடித்துச் சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்.

(D) நிலவை பிடித்து சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்.

**5.எடுத்துக்காட்டு எழுதுக.(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)**

**(i) செய்தி வாக்கியம்**

(A) விசாலப் பார்வையில் விழுங்கு மக்களை (B) தமிழ் தொன்மையான மொழி

(C) ஐயோ! எனில் யான் புலி அஞ்சுவனே. (D) சோற்றுக்கா என் உடம்பு?

**(ii) தன்வினைத் தொடர்**

(A) தேன்மொழி நன்றாகக் கற்றாள் (B) தேன்மொழி நன்றாகக் கற்பித்தாள்

(C) மக்கள் தலைவர்களால் பாராட்டப்பட்டனர் (D) பாவை உணவு உண்பித்தாள்

**(iii) செயப்பாட்டுவினைத் தொடர்**

(A) களை எடுமின் (B) களை எடுப்பாய்

(C) களை எடுக்கப்பட்டது (D) களைகளை எடு

**(iv) உணர்ச்சித் தொடர்**

(A) என்னே! திருக்குறளின் பொருட்சிறப்பு.

(B) திருக்குறளை எழுதியவர் யார்?

(C) திருக்குறளைப் படி

D) திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

**(v) தனிவாக்கியம்**

(A) தமிழரசி போட்டியில் பங்கேற்றாள்; வெற்றி பெற்றாள்; பரிசு பெற்றாள்.

(B) தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, அதன்வழி நடந்து, வாழ்க்கையில் முன்னேற அனைவரும் முயல வேண்டும்.

(C) பாரியும் கபிலனும் வந்தனர்.

(D) புத்தர் கொல்லா நெறியைப் போதித்தவர்., அதன்படி நின்றவர்.

**6.வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக.(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)**

**(i)** (A) பறவைகள் வானில் பறக்கிறது.

(B) பறவைகள் வானில் பறக்கின்றன.

(C) பறவை வானில் பறக்கின்றன..

(D) பறவைகள் வானில் பறந்தது.

**(ii)** (A) வனத்தில் மயில் அகவ சிங்கம் கத்தியது.

(B) வனத்தில் மயில் கத்த சிங்கம் சீறியது.

(C) வனத்தில் மயில் அகவ சிங்கம் முழங்கியது.

(D) வனத்தில் மயில் குனுக சிங்கம் உறுமியது.

**(iii)** (A) அதுவன்று நல்ல பழம்.

(B) அவையல்ல நல்ல பழம்

(C) அதுவல்ல நல்ல பழங்கள்

(D) அவையன்று நல்ல பழங்கள்

**(iv)** (A) அப்பிசி மாசம் அடமழம்பாங்க.

(B) ஐப்பசி மாசம் அடமழம்பாங்க.

(C) ஐப்பசி மாதம் அடை மழை என்பார்கள்.

(D)ஐப்பசி மாசம் அடை மழை என்பாங்க.

(v) (A) தென்னந்தோப்பில் தென்னம்பிள்ளை நட்டனர்.

(B) தென்னந்தோட்டத்தில் தென்னங்கன்று நட்டனர்.

(C) தென்னந்தோட்டத்தில் தென்னங்குரும்பை நட்டனர்.

(D) தென்னந்தோப்பில் தென்னைச் செடி நட்டனர்.

**பகுதி – இ-(இலக்கியம் – 31 மதிப்பெண்)**

**Section – C ( Main course book 31 Marks)**

**7.பின்வரும் செய்யுள் அடிகளைப் படித்து , அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.** **(5X1=5)**

`ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
`ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.'

**வினாக்கள்**

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) தண்டியலங்காரம் (B) நெடுநல்வாடை

(C) தொல்காப்பியம் (D) நன்னூல்

ii) இப்பாடலை இயற்றியவர் யார்?

(A) கனக சுப்புரத்தினம் (B) நன்னூலார்

(C) தண்டி (D) தமிழன்பன்

(iii) வெங்கதிர் என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

(A) வினைத்தொகை (B) வேற்றுமைத் தொகை

(C) உம்மைத்தொகை (D) பண்புத்தொகை

(iv) ஓங்கல் என்பதன் பொருள் யாது?

(A) மலை (B) பழங்கள்

(C) மழை (D) காடு

(v) உலகத்தின் புற இருளை அகற்றுவது எது?

(A) திங்கள் (B) ஞாயிறு

(C) நிலவு (D) ஒளி

**8.பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.** **(3x3=9)**

இன்று சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுப்பகுதிகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டுள்ளன. சென்னைக்கு அருகேயுள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி, அப்பகுதியின் மனித நாகரிகத்தின் பழமையை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என நிறுவுகிறது. அங்கு ஓடக்கூடிய கொற்றலையாற்றுப் படுகை மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று எனலாம். பல்லாவரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கற்கோடரி, இந்திய அகழ்வாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. மேலும் கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும் தொல் பழங்கால மானுட எச்சங்கள் இப்பகுதியின் பழமையை நமக்கு உணர்த்துகின்றன. இன்று சென்னையின்

ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர், கி.பி. (பொ.ஆ.) 2 ஆம் நூற்றாண்டில் 'தாலமி' என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

**வினாக்கள்**

(i) எப்பகுதியின் அகழாய்வு மனித நாகரிகத்தின் பழமையை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என நிறுவுகிறது?

(ii) இந்திய அகழ்வாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது எது?

(iii) தாலமி, மயிலாப்பூரை எப்பெயரால் சுட்டுகிறார்

(iv) மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று எது?

(v) தொல் பழங்கால மானுட எச்சங்கள் எப்பகுதியில் கிடைக்கின்றன?

**9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**(3x5=15)**

(i) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

(ii) ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

(iii) வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

**10. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளி**

(i) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க பண்பாகும் விளக்குக.

**(3x5=15)**

(ii) மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(iii) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

(iv) தொடரியல் போக்குகள் குறித்து எழுதுக.

(v) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

**Section – D ( Non-detail - 12 Marks)**

**பகுதி – ஈ (துணைப்பாடம் – 12 மதிப்பெண்)**

**11.கீழ்க்காணும் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** **(1x9=9)**

(i) தம்பி நெல்லையப்பருக்கு

(ii) உரிமைத்தாகம்

(iii) முதல்கல்

**12. கீழ்க்காணும் கதைமாந்தரில் ஒருவரின் பண்பு நலன்களை எழுதுக.**

(i) முத்தையன்

(i) காளியப்பன் **(1X3=3)**

**Section – E (Creative writing - 15 Marks)**

**பகுதி – உ(படைப்பாற்றல் – 15 மதிப்பெண்)**

**13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக**.

(i) பழுதுபட்ட சாலையைச் சீர் செய்ய வேண்டி மாவட்ட ஆட்சியாளருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக. **(அல்லது)** **(1x6=6)**

(ii) வெற்றிக்குத் தடையாக இருப்பவை எவை என்பது குறித்து உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

(உன் முகவரி: அ. முகிலன், 15,வள்ளுவர்வீதி, சிதம்பர நகர், மதுரை-625 003)

**14. சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளரை நேர்காணல் செய்க.**

**(1X3=3)**

**15. பின்வரும் தலைப்புகளுள் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக.** **(1X6=6)**

(i) மாசற்ற உலகம் படைப்போம்

(ii) தன் கையே தனக்கு உதவி

(iii) ஒற்றுமையே வலிமை